ஓம்

திருச்சிற்றம்பலம்

இலக்கண இலக்கியத் திறவுகோல்

இது

சென்னை, பச்சையப்பன் கலாசாலைத்

தமிழ்ப் போதகாசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

எழுதிய

முன்னுரையுடன்

சென்னை

ஆதிமூலம் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

துந்துபி-௵ ஆனி-மீ

விலை அணா 7.

ஓம்

திருச்சிற்றம்பலம்

இலக்கண
இலக்கியத் திறவுகோல்

இது

சென்னை, பச்சையப்பன் கலாசாலைத்

தமிழ்ப் போதகாசிரியர்

பணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

எழுதிய

முன்னுரையுடன்

சென்னை

ஆதிமூலம் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

துந்துபி-வரு ஆனி-மீ

விலை அணா 7.



திருச்சிற்றம்பலம்

முன்னுரை.

சொற்பொருளைத் துணிந்தறிதற்கும் பொருள்களை உள்ளவா றுணர்தற்கும் இலக்கணங் கருவியாகும். இலக்கண வறிவில்லார் பொருளுண்மை உணர்தல் அரிது. அன்றியும் இலக்கணங் கற்றோர் முன் அது கல்லாதார் கவினழிந்து நிற்பர். இதுபற்றி யன்றே, 'எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும் எழுத்தறிவார் காணினிலையாம்' என்று சிவப்பிரகாச சுவாமிகளும் அருளிச்செய்வாராயினர். இலக்கண நூலைக் கண்ணோடு ஒப்பித்துக் கூறி அதன் இன்றியமையாப் பெருஞ்சிறப்பை இனிது விளக்கினர் திருவள்ளுவ தேவரும். 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங், கண்ணென்ப வாழும் உயிர்க்கு' இதுபோல் வரும் ஆன்றோர் வாக்குக்கள் அளவிறந்தன.

இனி, இலக்கண நூல்களின் பயனைக் கூறுமிடத்து ஆசிரியர் அவை வீடு பேற்றைப் பயக்கு மாற்றினையும் உறுதிப் பொருள் நான்கினையும் அளித்தலையும் எடுத்திசைத்து அதன் மிக்க விழுப்பத்தைத் தேற்றினர்.

'எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தால்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.'

'அறம் பொரு ளின்பம் வீடடைதல் நூற்பயனே' என்ற திருவாக்குக்களை நோக்குக. இன்னோரன்ன காரணங்களான் இலக்கண அறிவின் இன்றியமையாச் சிறப்பு நன்கு விளங்கும். அற்றேல்,

'சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்'

என்று கூறியது எற்றுக்கெனில், அது இலக்கணக் கருவி யாதலை யறியாது, அதனையே வாழ்நாள்காறுங் கற்று, அதனால் எய்துதற் குரிய உறுதிப்பொரு ளுணர்ச்சியை அடையாதாரைக் குறித்துக் கூறியதேயன்றி இலக்கண வறிவை இழித்துக் கூறியதன்றாதலின் அது பற்றிவரக் கடவதோர் இழுக்கில்லை யென்க.

இலக்கண நூல்களைப் பன்னாள் கற்றுவல்ல புலவர்பால் கேட்டறிந்தும், சிலர் இலக்கணப் பிழை பொருந்துமாறு எழுதுதலையும் இலக்கண மிருந்த மூலையுங் கண்டறியாதார் சிலர் இலக்கண வழுவின்றி எழுதுதலையுங் கண்கூடாகக் காண்கின்றேம். அதற்குக் காரணம் யாதெனின், இலக்கணங் கற்ற துணையானே அவ்வறிவு கைகூடுவதன்று; பலகாலும் இலக்கியங்களில் பழகி அவ்விதிகள் அமையுமாற்றை அறிந் துணர்தல் வேண்டும். கல்லாதார் பழகுவதனால் சிறிது அவ் வறிவு வாய்ப்பப் பெறுகின்றனர். கற்றார் அஃதின்மை யால் சூத்திரங்களை யாரேனும் கேட்பின் நெட்டுருச் செய்த படி எடுத்துரைப்பாரே யன்றிப் பொருந்துமாறு தெரியாது

விழிப்பர் என்பதாம். இதனால் இலக்கண ஞானம் பழகுவ தால் பெருகி வளரும் என்பது இனிது புலப்படும்.

இலக்கணத்தை எழுத் தெண்ணிப் படித்த சுவாமிநாத தேசிகர் தாமியற்றிய இலக்கணக்கோத்தின் பாயிரத்தின் கண் இலக்கண நூற் கற்கு முறையை நன் கெடுத்து மொழிந்தனர். அது பின் வருவது:

"சிலநாட் பழகிற் சிலவும் பலியா
பலநாட் பழகிற் பலிக்கு மென்க.
விரைவாற் பார்க்கிற் றெறியா தொன்றும்
விரையா தேற்கிற் கருகா தென்க.
வருவதிற் கருத்தினை மட்டுப் படுத்தி
வந்ததிற் சிந்தையைச் சிந்தா திறக்குக.
நூலினை மீளவும் நோக்க வேண்டா
சூத்திரம் பல்காற் பார்க்கவே துணிக.
மாரிபோற் கொடுப்பினு மந்தனை விட்டுக்
கூரியனுடனே கொடுத்தும் பழகுக.'

நூலில் பல்காற் பழகும் பொருட்டு, 'இலக்கண விலக்கியத் திறவுகோல்' என்னும் இந்நூல் இயற்றப்பட்டது. பழகும் நூல்களும் சிறந்தனவாக இருத்தல் வேண்டும். அங்ஙன மாயினாலன்றி எல்லா விதிகளுக்கும் இலக்கியங் கிடைப்பது அரிதாகும். இக்கருத்தே பற்றி யன்றே, இலக்கணக் கோத்தாசிரியர், 'பல்காற் பழகினுந் தெரியா வளவேற், தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினும் முழங்கும்' எனக் கூறுவாராயிற் றென்க. இவ் வுண்மை கடைப்பிடித்தே இந் நூலாசிரியர் திருக்குறளுக்கு எழுதுவா ராயினர். இதன்கட் திருக்குறளை மாணக்கர் இலக்கணத் தேர்ச்சியின் பொருட்டுக் கற்குமுறை இன்னதெனத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு திருக்குறளி

[illegible]ரிய இலக்கண விதிகளைச் செவ்விதின் [illegible] எழுதி யிருக்கும் அவரது வன்மை பாராட் டுதற்குரியது. [illegible]ங்காங்குச் சில வினாக்களையும் மாணாக்கர்க்கு அறிவு பெருகும் பொருட்டு எழுப்பி யுள்ளார். அவை கற் போருக்குப் பெரிதும் வேண்டப்படுவனவாகும். சொல் லிலக்கணமே யன்றிச் செய்யு ளிலக்கண விதிகளையும் அணி யிலக்கணப் பொருள்களையும் ஒருங்கு சேர்த்துக் கூறி யிருக் கின்றனர். நன்னூல் சூத்திரங்களையுங் குறிப்பிட் டுள்ளார். இந்நூல் மாணவர்க்கே யன்றி ஆசிரியர்க்கும் பெரும் பயன் விளைக்கு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இதுபோல் பேரிலக்கியங்களாகவுள்ள வேறு சில நூற்களுக்கும் இவ் வாறே இந்நூலாசிரியர் சில பாகங்கட்கு எழுதியுள்ளார் என அறிகின்றேன். திருக்குறள் பத்து அதிகாரங்களுக்கு இத் திறவுகோல் எழுதப்பட் டுள்ளது.

இந்நூலாசிரியர் இன்னாரென்றும் அவரைப் பற்றிய வரலாறு இன்னதென்றும் தெரியவில்லை. நூல் எழுதப் பட்டிருக்கும் தன்மையில் அவர் சிறந்த புலமை யுடையவர் என்பதும், பன்னூ லாராய்ச்சி உடையவ ரென்பதும், தெளி வுடையவ ரென்பதும், கற்பிக்குந் திறனுடையவர் என்பதும் நன்கு விளங்குகின்றன. இதன் ஆசிரியர் கருத்து முற்றுப் பெறுமாறு செய்து, தமிழ் உலகு பயன் பெறுவதாக.

இங்ஙனம்,

மணி. திருநாவுக்கரசு முதலியார்.

இலக்கண இலக்கியத் திறவுகோல்

திருக்குறள்

முதல் அதிகாரம்

கடவுள் வாழ்த்து

அகரமுதல, எழுத்தெல்லாம், ஆதி
பகவன் முதற்றே, உலகு.

எழுத்து-எல்லாம்-எழுத்துகள் (ஆகிய) எல்லாம்-எனவிரியும் இருபயரொட்டுப்பண்புத்தொகைத்தொடர்மொழி.

அகரமுதல-அகரமுதல்-அ; முன்னையது பண்புத்தொகை-விளக்குக, பின்னையது பலவின்பால் குறிப்புவினைவிகுதி; ஆதலால் அகர முதலவென்பது பண்புத்தொகைக்குறிப்புமுற்று.

உலகு-இங்குசமுதாயவாசகம்-அகிலம்யாவும்.

ஆதிபகவன் முதற்று-ஆதிபகவன்-முதல் - று-விளக்குக; இச்செய்யுளில் முதலிலுள்ளது உபமானவாக்கியம் மற்றது உபமேயவாக்கியம். பின்னையதிலுள்ள உறுப்புக்களுக்கு-முன்னையதினுறுப்புக்களைத் தனித்தனி பொருத்திக்காட்டி யுபமானசம்பந்தத்தையும் விளக்குக.

மனிதர்பாஷையமைக்கத்தொடுத்த ஒலிகளுள் அகரமுதல் நாதம் என்பது அனுபவசித்தம்.

இப்படியே-உலகுக்கு-பகவான் காரணனாகவேண்டுமென்பது அனுமானசித்தம்.

எகாரம்-ஈசன் சத்தியமா யுளனென்பதுகாட்டும். (க)

கற்றதனால், ஆயபயன், என்கொல்; வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

கற்றதனால்-கற்றது அன் ஆல்,

கற்றது-கல்-ற்-அ-து,

கட்டினான்-சமைத்தான் - என்றால் முறையே வீட்டை, சோற்றை எனப்பொருள்படல்போலக் கற்றது என்பது என்னசொல்லை யவாவும்? இப்படிவருஞ்சொல்லுக்குஇசையெச்சமென்றுபெயர், இன்னுமிப்படி இசையெச்சம் வரும் சில உதாரணங்களைக் காட்டுக.

ஆய ஆகிய, இவ்வாக்கியத்தின் பொருள்என்ன?
என யாவது,

எவன் என்பது என் எனமருவி இன்மைப்பொருளைத் தந்தது

வாலறிவ னற்றா டொழாஅர்-இத்தொடர்மொழியிலுள்ள வேற்றுமை யையும் பண்பையும், புணர்ச்சி விரித்தோதுக.

கொல் என்பது அர்த்தமின்றிவந்த அசைநிலை.

இச்செய்யுள்வாக்கியத்தின் கர்த்த கர்ம கிரியையுங் கூறுக.
பயனென்என்பது பிரதானவாக்கியம்.

பயன்	எழுவாய்
என்	பயனிலை

கற்றதனலாய-என்பது எழுவாய்க்கு விசேஷணத்தொடர்; (மனிதர்) தொழாரெனின்-என்பது மேலைவாக்கியத்தில் பயனிலையைத் தழுவிவந்த வாக்கியம்.

தொழார்-எனுஞ் செயப்படுபொருள் குன்றுவினைக்கு-தாள்செயப் படுபொருள்.

வால் அறிவன்-நல்-இவ்விரண்டும் தாளுக்கு விசேஷணம்.

பின்னைய வாக்கியத்தைச் சார்புவாக்கியமென்றாவது விசேஷணவாக் கியமென்றாவது கூறலாம்.

இங்கு வாக்கியங்களின் தன்மையைச் சற்று விவரிப்பது அவசியம்.

எழுவாய்-பயனிலை-மாத்திரம் உள்ளவாக்கியம் செயப்படுபொருள் குன்றியவாக்கியம் அல்லது அகர்மகவாக்கியம்.

எழுவாய்-பயனிலை-செயப்படுபொருள்மூன்றுமுள்ளவாக்கியம்செயப் படுபொருள் குன்றாவாக்கியம் அல்லது ஸகர்மகவாக்கியம்; ஒரு வாக்கியத்துள்ள எழுவாயையாவது-பயனிலையையாவது செயப் படுபொருளையாவது சார்ந்துவரும்வாக்கியம் சார்பு அல்லது விசேஷணவாக்கியம்.

எழுவாயும் வினையெச்சமுமுள்ள வாக்கியத்தைக் குறையப்பயனிலை வாக்கியம் எனக்கூறலாம் (உ-ம்) சுப்பன் வர ராமன்போ னான். (உ)

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்தார்,

இத் தொடர்மொழியிலுள்ள பண்பையும் வேற்றுமையுருபுகளையும் விரித்தோதுக-இவ்வாறே இனிவரும் பாடலிலுள்ள தொடர் களையும் பிரித்தோதுக.

மலர்-என்பது உள்ளத்துக்காதலால் ஆகுபெயர்.

இனியேகுவானை-ஏகினான்என்பதற்கு நியாயமென்ன? (நன்-பொது-சூ-௩௩) நிலமிசை-விண்ணுலகின்கண்.
இச்செய்யுள்வாக்கியம் என்னபிரயோகம்,

பிரயோகமென்பது-கர்த்த-கர்ம கிரியையோடு வாக்கியம்தொடுக்கும் விதம். (௩)

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

இக்குறள்வெண்பாவை இரண்டுபிரிவுள்ள தொடர்மொழிகளாக்கி மேற்கூறியவாறேயோதுக.

வேண்டுதல்வேண்டாமையென்னும் இத்தொடர்மொழிக்கு அவாய் நிலைகூறுக.

அவாய்நிலையாவது ஒருசொல் மற்றொருசொல்லைக் கொள்ளுதற்கு வேண்டி நிற்றல்.

இடும்பை (எ-து) பாபவிசேஷத்தால் நம்மையணுகுந்துன்பம்.

யாண்டும்இல என்பதினால், இம்மையில் கடவுளை நினைந்து மனஞ் சலிப்பின்றி நல்லொழுக்கத்தினிற்பவன் இத்துன்பத்தை மனந் தளர்வின்றிச் சகிப்பானென்பதும், மறுமையில் வீடடைவ தால் இத்துன்பம் விட்டகலுமென்பதும் பெற்றாம்.

சேர்தலாவது இடைவிடாது நினைத்தல். (௪)

இருள்சேர் இருவினையுஞ் சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இங்கு இறைவன் புகழ்புரிந்தார் மாட்டு-என்னுந்தொடர்-சேரா வென்னும் எதிர்மறைமுற்றுப்பயனிலைக்கு விசேஷணம்.

புரிதல்-இடைவிடாது சொல்லுதல்.

இருவினையும் - என்பதினும்மை வேறுவினையில்லையென்னும் பொருண்முடிபைக் காட்டலால் முற்றும்மை.

நல்வினை-தீவினை-இரண்டினையும் ஈங்கு-இருள்சேர்-என்று அடை கொடுத்தோதினது நல்வினையா லுயர்ந்தபிறப்படைந்து இன் பம் அனுபவித்தலும், தீவினையா லிழிபிறப்படைந்து துன்பம் அனுபவித்தலும், உண்டென்றுகாட்டும் இந்துக்களுடைய கொள்கையை விளக்கற்பொருட்டு.

இவ்விருவினையும் பிறப்பிற்கேதுவாகலின் அப்பிறப்பைநீக்கி வீட டைய விரும்புவோர்க்கு அவ்விருவினையும் வெறுக்கத்தக்க தாதலின் இருள்சேர் இருவினையென்றார். (௫)

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீரொழுக்க
நெறிநின்றார்; நீடுவாழ்வார்.

ஐந்து-என்ன ?

ஐந்தாசையை அவிக்குங் கடவுளென்னாது பொறிவாயிலென்று விசே ஷணங் கொடுத்தெழுதினமையால் • ரூபாதிதனுகி யிருப்பவ

னென்பதும், உயிர்களுக்குள்ள ஐம்பொறிமுதலிய அஃவயவ உருவங்கள் அவனுக்கு இல்லையென்பதூஉம் - உணர்த்தினர். அவித்தா னென்பது அசம்பாவிதத்தை - சம்பாவிதம்போலக் கூறினர். பொய்தீர்ஒழுக்கம்-பொய்மைதீர்ந்த ஒழுக்கநெறியாவது கடவுளின்நிலையையுணர்ந்து அவனளித்த அருளைக் கொண்டு தீவழிவிலக்கிநல்வழிநின்று அவனையேதியானித்தல்.

இதன்தாற்பரியம்-உயிரைப்போல ஐம்பொறிவழியாய் வருமாசையின்றித் தனது இச்சாசத்தியோடு விளங்குங்கடவுளை நல்லறிவோடுண்மைநெறிப்படிநின்று நினைப்பவர்கள் அழியாவீடடைவார்கள்.

இராமனைப்பற்றிய நாடகம் இராமநாடகம் என்பதுபோல், அவித்தான் ஒழுக்கம், என்பது ஆறும்வேற்றுமைத்தொகையில் வந்தது-தற்கிழமை, பிறிதின்கிழமையின்றி இப்படி வருவதை செய்யுட்கிழமையென்று கூறுப.

உடையவென்னுந் தொக்கியிருக்கிற குறிப்புப் பெயரெச்சத்திற்கு பொறியென்பது செயப்படுபொருள்.

வாயில்-என்பது-ஆகஎன்னும் தொக்கியிருக்கிற வினைக்குறையைக் கொண்டு யிடைப்பிரவரலாய் முடிந்தது.

நீடு-முதனிலைத்தொழிலாகுபெயர், காலங்காட்டி நின்றது. (சு)

தனக்குவமையில்லாதான் றாள்சேர்ந்தார்க்கு; அல்லான்
மனக்கவலை மாற்றலரிது.

இச்செய்யுள்-இரண்டு வாக்கியங்களடங்கிய ஒரு தொடர்வாக்கியம். இதில் பின்வாக்கியத்தில் கொடுத்திருக்கிற பயனிலையைக் கொண்டு அதற்கு எதிர்மறையாக முன்வாக்கியப் பயனிலையையும், இவ்விரண்டு பயனிலைகளுக்கும் நான்காம்வேற்றுமையையும் அமைத்துக்கொள்க. எப்படியென்றால் - தனக்குவமையில்லாதான் றாள்சேர்ந்தார்க்கு மனக்கவலைமாற்றல் (எளிது)

சேராதார்க்கு மனக்கவலைமாற்றல் (அரிது)

அல்லால் என்பது இரண்டு வாக்கியங்களையும் இணைக்கிற எதிர்மறைப்பண்பிடைச்சொல்.

அல்லாற் என்பது அல்லால் என இடைகுறைந்தது.

அரிது என்பது இல்லையென்னும் பொருளில்வந்தது.

எளிது-என்பது உண்டென்னும் பொருளில்வந்தது. (எ)

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

இச்செய்யுள்வாக்கியத்தை மேற்கூறிய வாக்கியத்தைப்போல விளக்கிக் காட்டுக.

இங்குபிறவாழியென்றது - பாவக்கடலாதலால் - ஈசுரன்தாளே-அக்கடலைத் தாண்டும் புணையாகக்கொள்ளவேண்டும். ஏனென்றால் ஈசுரன்றருமஸ்வரூபியுந் தயாளுவுமாதலால் தன்னை நினைத்தவர்கள் பாவிகளானாலும் காப்பாரென்பது திண்ணம் அம்-தண்-அன், என்பது அந்தணனென்றாகி அழகிய கிருபையை உடையவனென்று பொருளுண்டாயிற்று. (அ)

கோளில்பொறியிற் குணமிலவே-எண்குணத்தான்
தாளை, வணங்காத்தலை.

கொள்-என்கிற பகுதி தொழிற்பெயராய்க்கோள் எனநின்றது. இதற்குப்பொருள் கொள்கை-கண்முதலிய பொறிகள் பார்வைமுதலிய புலன்களைக்கொள்ளும். ஆதலாலிங்கிருக்கிற இசையெச்சத்தைக் கூறுக.

தலைஎன்பது சினை ஆகுபெயர் இச்செய்யுளின்பொருள் எண்குணங்களையுடைய ஈசுரனை நினையாதவர்கள் பார்வைமுதலிய புலன்களின்றிக் கண்முதலிய உறுப்புக்களிருந்தும் பயனடையாவாறுபோல் மக்கள்யாக்கையெடுத்தும் பயன்பெறாது போவார்கள்.

தலையென்பது பால்பகாவஃறிணைப்பெயராதலால் பன்மை வினைகொண்டு முடிந்தது. (கூ)

பிறவிப் பெருங்கட னீந்துவர், நீந்தார்
இறைவனடி சேராதார்.

இச்செய்யுளின்முதல்வாக்கியத்தில் இறைவனடிசேர்ந்தார் என்பதை எழுவாயாக வருவித்துக்கொள்க. இங்கு சேர்ந்தார் என்பது சொல்லெச்சம். (கo)

திருவள்ளுவநாயனார் முறைப்படி கடவுள்வாழ்த்துக்கூற ஆரம்பித்து முதற்செய்யுளால் கடவுளுண்டென்பதும்,

இரண்டாவதால், கடவுளை வணங்காவிடில் நூல்களையுணர்ந்தும் பயனில்லை என்பதூஉம்.

மூன்றாவதால், அவரை வணங்கினோர் வீடுபெறுவர் என்பதூஉம்,

நான்காவதால், அன்னோரைத் துன்பம் வருத்தா தென்பதூவும்,

ஐந்தாவதால், அவரைப் புகழ்வார்க்குப் பிறவியறு மென்பதூஉம்,

ஆறாவதால், அவனருள்வழி நின்றோர்க்கு வீடுண் டென்பதூஉம்,

ஏழாவதால், அவனை வணங்கார்க்குத் துன்பத்தை நீக்க வேறுபாயமில்லை யென்பதூஉம்,

எட்டாவதால். அவரை வணங்காதவர்கள் துன்பத்தில்மூழ்கி யிருப்பார்களென்பதூஉம்,

ஒன்பதாவதால், அவர்கள் ஆக்கையெடுத்துப் பிரயோசனமில்லை யென்பதூஉம்,

பத்தாவதால், அன்னோர்பிறப்பு ஒழியாரென்பதூஉம், விளக்கினார்.

இவ்வாறே நாயனார் அருளிய அதிகாரங்களுள் ஒன்றோடொன்று பொருளிற் றொடர்ந்திருப்பதன்றி ஒவ்வொரு அதிகாரத்தினுள்ள குறள்களும் சங்கிலித்தொடர்போற் பொருள்களிற் பிறழாது ஒன்றையொன்று தழுவிநிற்கின்றன இவைகளை மாணாக்கர்கள் ஆங்காங்கு உய்த்துணர்ந்து கொள்க.

இரண்டாம் அதிகாரம்.

வான்சிறப்பு.

வானின்று, உலகம்வழங்கி வருதலாற்றான் ;
அமிழ்தம், என்றுஉணரல் பாற்று.

அமிழ்தம் புசித்தோர் சாகார்-மழைவிடாதுபெய்துநிற்ப, உலகு அழியா, ஆதலின்-மழையை அமிழ்தமென்றார்.

அமிழ்தம்-சாகாமருந்து
வடமொழி (அ-மிருதம்)

நிற்பஎன்பது நின்றெனத் திரிந்தது (நன்-வினையியல்-கூ-உஎ). இச் செய்யுளுக்கு தான்-எழுவாய், உணரற்பாற்று-பயனிலை, தான்-என்பதற்கு அம்மழைதானெனப் பொருள்கூறுக.

வானின்றுஎன்பது உலகம் வழங்கிவருதலால் என்னும் வாக்கியத் தின் வினையைத் தழுவியிருக்கின்றது.

உலகம்வழங்கிவருதலாலென்பதும் அமிழ்தமென்றுஎன்பதும், உண ரற்பாற்று என்னும் பயனிலையைத் தழுவியிருக்கின்றன; உண ரர்பாற்றுஎன்னும் பயனிலையானது-உணரல் என்னுந்தொழிற் பெயரும்-பாற்று-என்னுங் குறிப்புவினைமுற்றுஞ் சேர்ந்து ஒரு வாக்கியப் பயனிலையாய் நின்றது.

பால்-று-என்பதுபாற்று என்றாயிற்று (நன்-வி-கூ-க) இவ்வாக்கியத் தில் வானை மூன்றாம்வேற்றுமையாக்கி நின்றுஎன்பதைஉலகத் தின்மேலேற்றி வழங்கிவருதல் - என்பதற்கு நடந்துவருதல் எனப் பொருள்கூறி விளக்கினும் அமையும், வானினால் உலகம் நிலைபெற்றுத் தொழில்கள் நடந்துவருதல், எனப்பொருள் விரி யும். (க)

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

துப்பாய தூஉம்-எழுவாய், மழை-பெயர்ப்பயனிலை.
உம்-எண்ணும்மை.
துப்பாக்கியதும்-துப்பாவதும்-எனவிரியும்.

இவ்வாறுசிலவாக்கியங்களைத்தொகுத்தும்விரித்தும் எழுதிக்காட்டுக.

தூஉம்என்னுமளபெடை, தேமாவென்னுஞ்சீரின் அசைநிறைக்க வந்தது. (உ)

விண்ணின்றுபொய்ப்பின், விரிநீர், வியன்உலகத்துள்
நின்றுஉடற்றும் பசி

விண்ணின்று-விண்-இன்று-உடற்றும் என்பதற்கு உயிர்செயப்படு பொருளாய்த்தொக்குநிற்கின்றது-உடலல்தன்வினை, உடற்றல் பிறவினை.

பொய்-ப்-இன்.

விரிநீர்-வினைத்தொகை

மழை பொய்க்குமாயின் கடல்நீரால் பயனில்லையென்பதும் ஓரிடமின்றி எல்லாவிடங்களினும் பசிவருத்துமென்பதும் தோன்ற, விரிநீர் வியனுலகமென்றார்.

பசி-என்பதை ரூபகமாக்கிக் கர்த்தத்துவமேற்றிச் சொன்னார். (ரு)

(நன்னூல்-பொது-சூ-௫அ)

ஏரின் உழாஅர், உழவர் ; புயலென்னும்
வாரிவளங் குன்றிக் கால்.

வாரிஎன்பது வருவாய்-முதலாம்வேற்றுமை

வளம்என்கிற பெயரும்-குன்றல்என்கிற வினையுஞ்சேர்ந்து தொடர்வினை, அல்லது வளம்என்பதை எழாம்வேற்றுமையாகக்கொள்ளினும் இழுக்கில்லை-வாரியை ஆறும்வேற்றுமைத்தொகையாயும் கொள்ளலாம் ; விளக்குக.

குன்றியக்கால் என்கிற வருங்காலத்துவினையெச்சம் இடைக்குறையாய் நின்றது.

ஏரின்என்பதில் மூன்றனுருபு-ஐந்தனுருபாக மயங்கி வந்தது. (௪)

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉம் எல்லாம் மழை.

மழைபெய்யாவிடின் உயிர்வாழ்க்கைகெடும்; பெய்தால் கெட்டவுயிரும் உய்யும் என்பது கருத்து.

கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்என்கிற இரண்டுவினையாலணையும் பெயர்களும்-ஆகிய என்னுந் தொகைநிலைப்பெயரெச்சத்துக்கு முதலாம் வேற்றுமை-மழை-எழுவாய், வல்லது குறிப்புப் பயனிலை,எல்லாம்வல்லதுமழை-எல்லாம்-எழாம்வேற்றுமைத்தொகை. இச்செய்யுளில்வந்த அளபெடைகளிரண்டும் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தளைதட்டாது-ஆதலின் இது இன்னிசை நிறைக்கவந்த அளபெடை-குறில்நீண்டளபெடுத்தன,

இரண்டுமென்னுது எல்லாமென்றது கெடுக்கும்வழியும் எடுக்கும் வழியும் பலவாதலால்-அல்லது வியப்பாற் கூறினுரெனினும் அமையும். மற்றஎன்பது கெடுக்காதென்னும் வினையெச்சத் திக்குப் பதிலாய் வந்தமையால் வினைமாற்றிடைச்சொல்.

ஆங்குஎன்பது மேல்கெடுத்த விரைவுபோலவேயென்று பொருள் படுதலால், உவமை இடைச்சொல்.

ஏகாரம் என்ன ? (ரு)

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றுங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

இச்செய்யுளின் தொடர்வாக்கியத்தைமுதல் அதிகாரத்தின் ஏழாவது பாடலிற் காட்டியதுபோலப் பிரித்தெழுதுக.

மற்று, வினைமாற்றிடைச்சொல் எப்படி?
ஆங்கு, என்பது விரைவுபற்றிவந்த இடைச்சொல்.
அரிது, என்பதைக்கொண்டு முடியும்.

ஏ-என்ன ?

மழைபெய்யாவிடின் புல்லும் இல்லையென்பது இதன்கருத்து. விசு ம்புஎன்பது-ஆகாயத்திலுள்ள மேகத்துக்காயதால்என்ன ஆகு பெயர் ?

தலையும்-என்பதினும்மை விகாரத்தாற்றொக்கது, என்ன உம்மை ? காண்பு-அரிது. (சு)

நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றுந்
தடிந்தெழிலிதான் நல்காதாகி விடின்

தடிந்து குறையச்செய்து-தன்வினை-பிறவினையாகி வந்தது. தான்என்பது யிடைச்சொல்.

கடலும்என்பதில் தண்ணீரியல்பே குன்றினல் பூமியென்படாதென் பது கருத்து உ-ம். என்ன ?

கடலின்இயல்பு குறைதலாவது மீன்முதலிய உயிர்களும் முத்துமுத லிய பதார்த்தங்களும் உண்டாகாமை.

இச்செய்யுளால்-மழைக்குக் காரணமாகுங் கடலே துன்படையுமாயின், அம்மழையால் நிலத்திருக்கும் உலகுளன்படாது என்பது பொருள். (எ)

சிறப்பொடு பூசனை செல்லாது, வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

திவியில்-வசித்தலால் தேவர்களென்று அவ்விடத்தி லுள்ளவர்களுக்குப் பெயரேயொழிய அவர்களைக் கடவுளென்று கொள்ளத் தக்கதன்று. பூவுலகத்தாருக்கு வானுலகத்தார் சிரேஷ்டரென்று சகல மதஸ்தர்களும் ஒப்புக்கொண்டிருத்தலால்-இங்கு பெரியோர்களுக்கு யாம் செய்யும்வண்ணம் வானோர்க்குஞ் செய்யத் தக்க கடமை யுண்டென்பது இந்துமதம். ஆதலால், இச்செய்யுளுக்குப் பொருள், மழைபெய்யாவிடின் இப்பூமியின்கண் வானோர்க்கும் நித்திய, நைமித்தியங்களும் நடவா. பூசை தினந்தோறும் நடப்பது அவசியமாதலானும், சிறப்புப்பொருளிருந்தாற் செய்யத்தக்கதாதலானும் பின்னையதை ஒடுக்கொடுத்து அப்பிரதானமாக்கினர். அதாவது பெரியோர் வந்தால் உபசரிப்பது யார்க்கும் அவசியமானகடமை - அவர்கள் கோரியதைக் கொடுப்பது ஆக்கமுள்ளோர்க்கே சாத்தியம். (அ)

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

உலகம்-ஏழாம்வேற்றுமைத்தொகை.

வழங்காதெனின்எனும் வினைக்கு மழை தொகைநிலைச்செயப்படு பொருள்.

தானம்-இல்லறம், தவம்-துறவறம்.

தானம்-மனிதன் செய்யவேணடும் கடமைகள்.

தவம்-அவன் அனுஷ்டிக்கவேண்டிய நன்னெறி. (௯)

நீரின் றமையா துலகெனின் ; யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

உலகு ஆகுபெயர் உலகியல்பு.

எவ்வகைமேம்பாட்டார்க்கும்-உலகவாழ்க்கைக்கு-நீர் அவசியம்,

அப்படியே-ஆறு கிணறு சுனை முதலிய நீரொழுக்கிற்கெல்லாம் மழைஅவசியம் - ஆகவேமழையின்றி நீர்ஊறு, நீரின்றி உலகு உய்யா-என்பதுபொருள். (கo)

இவ்வதிகாரத்தினுள்ள செய்யுட்களின் பொருளின் தொடரை முன் அதிகாரத்திற் கூறியபடி விரித்துக்காட்டுக.

மூன்றும் அதிகாரம்.

நீத்தார்பெருமை.

இங்கு, நீத்தாரென்பது உலகியலையும்-இல்லறவாழ்க்கையினது நிலையாமையையும் உணர்ந்து கடவுளின் தன்மையைத் தெரிந்து பற்றுக்களைவிட்டு வீடடைய முயல்வோரை.

இப்படி நீத்தார் முத்திமார்க்கத்திற்குரிய வழிகளைத் தேடித் தங்கள் சுகத்தைப் பார்ப்பதுமன்றிச் சிவகாருணியத்தோடு பிறர்க்கு வழிகாட்டவும், இல்லறத் தமைந்தோ நல்லொழுக்கத்தினிற்கவும், அவர்கள் செய்யவேண்டிய கடமைகள் முதலியவற்றை விவரித்துப் பலநூல்களியற்றுவது இத்தேசத்தன்றி பிறதேசங்களிலும் தொன்றுதொட்டவழக்கம். ஆதலால், இன்னோர்பெருமை வான்சிறப்பின் பின்னல் வைக்கப்பட்டது. இதற்கு மேற்கோள்-நாலடியார் "பெயற்பான்மழைபெய்யாக் கண்ணுமுலகஞ்-செயற்பால செய்யா விடினு-என்னை யுலகுய்யுமாறு."

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

வேண்டும்என்பது குறிப்புவினைமுற்று.
துணிவுஎன்கிற எழுவாய்க்குப் பயனிலை,
பெருமை செயப்படுபொருள்.

ஒழுக்கத்து நீத்தார்என்பது நல்லொழுக்கத்தினின்று தீவழி ஒழித்தவர்கள் விழுப்பத்து-சிறந்தபொருள்களுள். (விழுப்பம்-அத்து) நூல்கள்சொல்லும் பெருமையான பொருள்களுள் ஒழுக்கத்து நீத்தார் பெருமை சிறந்தது. (க)

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக் கொண்டற்று.

துறந்தார்-எதனை ?
பெருமை-நான்காம்வேற்றுமைத்தொகை.
துணை-இரண்டாம்வேற்றுமைத்தொகை ;
கூறும், என்னும்வினைக்குச் செயப்படுபொருள்,
அல்லது பெருமையைத் துணையினாற் கூறினெனவைத்து இரண்டுமூன்றுமா யிணைக்கினு மிழுக்காது.
இச்செய்யுளுக்கு யாம் தோன்றாவெழுவாய்.
கொண்டால்என்பது கொண்டெனத் திரிந்துநின்றது.
அல்லது கொண்ட-அற்று-கொண்டற்று.
அற்று-குறிப்புவினைமுற்று, அன்னது.
அற்று-அன்ன-று-அன்-று அற்று என்றாயிற்று.
துணைக்கூறலும், இறந்தாரை யெண்ணலும் கூடாதென்பது கருத்து. (உ)

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

இங்கு-இருமைஎன்பதில் மை விகுதி பகுதிப்பொருளையே காட்டும் அதின் றன்மையன்று.

இவ்வாறே ஒருமை, மும்மை, எழுமைமுதலியன.
இருமை-ஆறாம்வேற்றுமைத்தொகை.
இதற்கு-அவாய்நிலை-பிறப்பு-வீடு-அல்லதுநன்மை-தீமை.
அறம்பூண்டார்-நல்லொழுக்கத்தை யாபரணமாகக் கொண்டவர்கள். உலகு-ஏழாம்வேற்றுமைத்தொகை.

பெருமை-என்பதில் பிரிநிலை ஏகாரந்தொக்கியிருக்கின்றது.
அறம்பூண்டார்பெருமையேயொழிய அதிகாரஞ்செலுத்தினோர் பெருமை, பிறங்கிற்றிலவென்பது கருத்து. (௩)

உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

நீஎன்னைக்காஎன்பதில் எனக்கு ஆபத்துவராமல் கா என்று பொருள். நீ-உன் நாயைக்கா-என்பதில், அந்நாய் பிறருக்கு ஆபத்து விளைக்காமல்-கா-என்பது பொருள் - இச்செய்யுளில்-கா-என்பது பின்னைய அர்த்தத்தில் வந்திருக்கிறது. இப்படி பலவுதாரணங்களை யெழுதிக்காட்டுக.

ஐந்தும் என்பது ஐம்புலன்.

வரன்என்னும்-வைப்பு-சிறந்ததென்கிறபூமி.

அதாவது மோக்ஷபூமி.

உரம்என்பது உரன்என்றாயிற்று.

இவ்வாறுள்ள போலிகளைக் கூறுக.

உரன்-தோட்டியானல்-யானைகளெவை ? யானைப்பாகன்யார் ? மோக்ஷமாகிய வயலுக்கு - இவன் வித்தாகி முளைத்துச் செழிப்பானென்பது கருத்து. (ச)

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

அகலிகையின்பொருட்டு இந்திரனுக்குக்கௌதமரால் நேரிட்டசாபம் யாருக்குந் தெரிந்த கதை.

ஐந்து-என்பதில் முற்றும்மை தொக்கியிருக்கின்றது.

ஆற்றல்-என்பது நாலாம்வேற்றுமைத்தொகை.

ஏகாரத்தால் வேறுகூறுவது அவசியமில்லையென்பது விளங்கும். (ரு)

செயற்கரிய செய்வார் பெரியர் ; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

செய்கலாதார்என்பதில் செய்க-வினையெச்சம். அகலாதார் எதிர்மறைமுற்று முதற்சொல்லின்கடை தொக்கிப்புணர்ந்தது.

செய்யத் திராணி யில்லாதார்-என்னும்பொருள்படவந்தது.

இருவழியிலும் செயற்கரியவென்பது வினையாலணையும்பெயர்.

இரண்டாம்வேற்றுமைத்தொகை.

இசசெய்யுளை - கீழ்வருஞ் செய்யுளுடனே பொருளொட்டிக் காண்க.

" பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்கும் ; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்." (சு)

சுவையொளியூ றோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு

இங்கு-ஐந்தின்வகையென்பது ஒவ்வொரு புலனுக்குமுரிய தன்மாத்திரையென்னுந் தத்துவங்கள்.

இவைகள்-௨0-என்றும் ௨டு என்றும் பலவாறாகச்சொல்லுவார்கள்.
இதுநிற்க, உலகத்திற்கேற்றபடி ஐந்தின்வகைதெரிதலாவது ஐம்புலன்களை யின்னின்னவிடத்தில் செலுத்தல்கூடும், இன்னின்ன விடத்தில் கூடாதென்று உய்த்துணருந்தேர்ச்சி. கட்டே-கண்ணது, கண்-டு-என நின்று கட்டு என்றாயிற்று-இதை விளக்குக. (நன்-வினை-சூ. க)

ஏ-என்ன ?

இத்தகையஞானிகள்சொற்படிஉலகத்தார் நடப்பாரென்பது கருத்து.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

செயற்கரிய செய்வார் பெரியரென்பதற்கேற்க நிறைமொழி மாந்தரென்றார்.

நிறைமொழிஎன்பது பழுதுபடாமொழி
மறைமொழி-வேதமொழியென்றும் மந்திரமென்றும் கூறலாம்.

இதுநிற்க உலகத்திற்கேற்றபடி இச்செய்யுளுக்குப் பொருள். பழுதுபடா மொழியையுடைய பெரியோர்கள் பெருமையை அவர்கள் இயற்றிவிட்ட நீதிநூல்களே தாமாய்க்காட்டும்.

இவ்வாறே நாயனார் குறள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு ஆசிரமத்தைப் பற்றிச் சிறப்பாய்ச்சொன்னதாயினும், அதுவே பொதுப்பட உலகநீதி விளக்கவும் உபயோகப்படும். இதுவே இந்நூலின் பெருஞ்சிறப்பு. மொழிமாந்தர் என்பது உருபும் பயனுமுடன்றொக்கிய இரண்டாம்வேற்றுமைத்தொகை ; விளக்குக.

காட்டிவிடும்என்பதில் விடும்என்பது துணிவுவினை.
இதுவேறுவினையோ டொட்டிவருமேயன்றித்தனித்துவாராது.
விடுஎன்கிற முதல்வினை இதன்று.
நிலம்-அத்து-நிலத்துஎன்பதற்கு (நன்-மெய்-ரூ-கச)
அத்துச்சாரியை ஒன்றுதான்தனித்து எழாம்வேற்றுமைப்பொருளைத் தரும். (அ)

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

உரனென்னுந்தோட்டியால் புலன்களை யடக்கியதனால் வந்த வீரத் தன்மையோடு நற்குணங்களை மேற்கொண்டாராதலான் அக் குணங்களைக் குன்றென்றார்.
குணம்-சாதியொருமை.
கணமேயும்என்பதால் அவர்பால் பிழைசெய்யினும் பெரும்பாலும் வெகுளாரென்பது பொருள்.

ஆதலால்-உம்-என்னஉம்மை ?

காத்தலரிதுஎன்பது அவர்கள் சாபத்தைச் சகித்தல் கூடாது.
அவர்களுக்கு வெகுளி உண்டாகுங்கால் அவர்கட்டேஉலகும் ;
ஆதலின்அவர்கள் வாளாவிருக்கினும் அக்கணமே தப்பிதஞ் செய் தோரை உலகத்தார் சும்மாவிடார் என்பது கருத்து.
மேலும் அவ்வாறுபிழைசெய்தோர்க்கு நீத்தாராலும் உலகத்தாராலும் தீங்குநேரிடாவிடினும் கடவுள்கோபத்திற்கும் நிரையத்துக்குந் தப்பார். மேற்கோள் நாலடியார்—“ தம்மையிகழ்ந்தமை ” என் னும் பாட்டிற்காண்க. (கூ)

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

மற்றுஅசைநிலை.
செந்தண்மை-காருணியம்
பூண்டொழுகல்-விரதமாகக்கொண்டு நடத்தல்.
இச்செய்யுளுக்கு எழுவாய், பயனிலைகூறி
இன்னது எழுவா யென்பதற்கு ஞாயஞ்சொல்லுக. (கய)

நான்காம் அதிகாரம்.

அறன்வலியுறுத்தல்.

சிறப்பீனுஞ் செல்வமு மீனும் ; அறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

சிறப்பு-வீடு,
செல்வம்-துறக்கமுதலியன;
அல்லது சிறப்பு-பெருமை-புகழ்;
செல்வம்-போகம்.

முதல்வாக்கியத்துக்கு அறம் தோன்றாஎழுவாய்.
அல்லது ஈனும்என்பதைப் பெயரெச்சமாகக்கொண்டு ஒரு வாக்கியமாக முடிப்பினும் இழுக்காது.
ஊங்குஎன்பது குறிப்புப்பெயரெச்சம், அல்லது
உயர்விழிவு எல்லைப்பொருளில் வந்த இடைச்சொல்.
ஆக்கம்என்பது ஆக்கத்தைத் தரும் வருவாய்.
ஆதலால் என்ன ஆகுபெயர் ?
ஒ என்பது வேறொரு வழியுமில்லை யென்பதைக் காட்டும்.
ஆதலால் ஒகாரம் என்ன ?
எவன் வினாகுறிப்புப்பயனிலை. (க)

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூஉங்கில்லை கேடு.

வேறொன்றை விதிக்க அறத்தின்-ஊங்கு என்று மீண்டும் எடுத்தார்.
மழைபெய்யப் பயிர்செழிக்கும்,
பயிர்செழிக்கத் தானியம்விளையும்,
தானியம்விளைய,உலகம் உய்யும் என்பதுபோல். இவ்வாறு பின்னும் சிலவாக்கியங்களை யெழுதிக்காட்டுக.
அறத்தின்என்னும் ஐந்தாம்வேற்றுமை ஆக்கம் என்னும் பெயரைக் கொண்டது. (உ)

ஒல்லும் வகையால் அறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்.

ஓவாதவென்னும் எதிர்மறைவினையெச்சம் செயல்என்னும் வியங்கோள்வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

ஒருவன்-தோன்றாவெழுவாய்.

இயலுந்திறமென்பது-இல்லறம் பொருளளவிற்கேற்பவும், துறவறம் உடம்பினிலைக்கேற்பவுஞ் செய்தல்.

ஓவாமை-இடைவிடாமை.

எய்தும்இடமாவன-மனம் வாக்குக் காயங்கள்.

அவற்றாற் செய்யும் அறங்களாவன-முறையேநற்சிந்தையும், நற்சொல்லும், நற்செயலுமென விவை. "

மனத்துக்கண் மாசில னாதல் ; அனைத்தறன்?
ஆகுல நீர பிற.

ஆதல்-வியங்கோள்முற்று.
அனைத்து-குறிப்பு முற்று.

அ-சுட்டு, தனை-அளவிடச்சொல், அத்தனை-அனை ; பிறகு து-விகுதி பெற்று அனைத்து என்று ஆயிற்று.

நீர-குறிப்புமுற்று; ஆகுலம் - வெளியிடம்பம், ஆறும்வேற்றுமைத் தொகை; முதல்வாக்கியத்திற்கு-ஒருவன்-தோன்றாவெழுவாய். பிற-மனத்தொழிலொழிந்த சொல்லும்செயலும் இடையடியாக வந்த பெயர்ச்சொல். (ச)

அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

இழுக்கா-பகுதி-இழு, ஆ-எதிர்மறை, கு-சாரியை.
இயன்றது-செய்வினை-செயப்பாட்டுவினையாய் வந்திருக்கிறது; பொருள், செய்யப்பட்டது.
இயன்றது-எழுவாய்; அறம் பயனிலை.

அறஞ்செய்யுங்கால் இந்நான்கு துற்குணங்களும் இருக்கலாகா வென்பது தோற்றப்பிரிநிலை-ஏகாரம் தொக்குநிற்கின்றது, காட்டுக.

அன்றறிவா மென்னா தறஞ்செய்க ; மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

அன்று-உயிர்போகும்-ஆபத்துவந்தவன்று.
பொன்றுங்கால்-இறக்குங்கால்.
பொன்றாத்துணை - உடலோடழியாது உயிருக்குச் சுகமளிக்க வருந்துணை. மற்று என்ன ? (௬)

அறத்தா றிதுவென வேண்டா ; சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

முதல் வாக்கியத்திற்கு யாம் தோன்றாவெழுவாய்.
இரண்டாம்வாக்கியத்தின் கடையில்-காண்க-என்பதைக் கூட்டி வேண்டு மெழுவாயுட னிணைத்துக்கொள்க. அல்லது என என்பதைத் தொழிற்பெயராக்கி வேண்டாமெனும் பயனிலையுடன் முடிக்க.

இங்கு-ஆறு, தர்மத்தாலுண்டாகும் பயன்; அப்பயன் சென்மந்தோறும் தொடருமென்பது தோன்ற ஆறென்றார். (௭)

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

படாஅமை-அளபெடை யெதற்கு வந்தது;
அஃதொருவன்-என்பது நன்றாற்றின் என்னுங் காய்ச்சீரை அடுத்து வந்தபடியால் இங்குஇடைநின்ற ஆய்தத்தை ஒற்றாகக் கொண்டு இச்சீரை கூவிளங்காய் வாய்ப்பாட்டுடன் ஒட்டுக.
இப்படி ஆய்தம் ஒற்றாய் வருகிற சிலவுதாரணங்களைக் காட்டுக.
உயிராய் வரும் உதாரணங்களையுங் காட்டுக.

வீழ்நாள்-நல்லறஞ் செய்யாது கழிந்த நாள்.
படாமை-எதிர்மறைவினையெச்சம்.
அஃது-அங்ஙனமாற்றல் எழுவாய், கல்-பயனிலை.
வாழ்நாள்வழி-சென்மமெடுக்கும்வழி. (௮)

அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்,
புறத்த புகழு மில.

அறத்தான் உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது
ஏ-வேறு இன்பம் இன்பமல்ல, துன்பம் என்பதைக் காட்டும்; என்ன ஏகாரம் ?

புறத்த-இடையடியாய் வந்த குறிப்புவினைமுற்று.

மற்று-அறம்ஒழித்த வென்பதைக் காட்டும்; ஆதலால் என்ன பொருள்?

புகழும் இல்லையென்பதால், அறவழியில் செய்பவனுக்குத் துன்பம் விளைக்கினும் புகழுண்டாக்கத்தக்க வினையுண்டென்பது கருத்து. இங்கு அப்புகழும் வாராது. (கூ)

செயற்பால தோரு மறனே, ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

செயற்பாலது-செய்பத்தக்கது.

ஓரும்-இருவழியும் அசைநிலை.

பழி-தீவினைபிறரால் பழிக்கப்படுதலால் பழியென்றும், அல்லது பிறர்க்குப்பழியை விளைத்தலால் பழியென்றுங் கூறப்பட்டது.

உயற்பாலது-நீக்கத்தக்கது.

ஒருவன்-குருவற்கு, வல்லினம் நின்றவிடத்து இடையினம் நின்றால் புணர்ச்சியென்ன பொருளைத்தரும்? (கo)

ஐந்தாம் அதிகாரம்.

இல்லறவியல்பு.

"இல்லறமல்லது நல்லறம்அன்று" என்று ஔவை சொல்லியபடி இரண்டறத்துள், தலைமையானது இல்லறமாதலால் அதனை முற்கூறி இல்வாழ்க்கை இத்தன்மைத்தென்று விளக்குகின்றார்.

இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

இயல்புடைய மூவர் என்பதனால் பிரமசரிய விரதத்திலிருந்து பிறகு இல்வாழ்க்கையை நன்றாய்நடத்த வித்தியாப்பியாசஞ் செய்பவனும் இல்வாழ்க்கை;நிலையிலிருந்து தான் செய்யத்தக்க கடமைக

ளெல்லாஞ்செய்து, அப்பால் இல்வாழ்க்கைச்சுகம் போது மெனத்திருப்தியடைந்து,மனைவியோடு தனித்து நாட்கழிக்கும் வானப்பிரஸ்தனும்; இதற்குமேல் மெய்யுணர்ந்து தனித்தொழி யும் சன்னியாசியும் ஆகிய மூவருமாம்.

இப்பாகுபாட்டால் பூர்வத்தில் நம்முடைய தேசத்தில் அதிபாலியத் தில் ஆடவர் மணம்புரிந்து குடும்பப் பாதுகாக்கும் வழியின்றித் துன்பப்படுங் கொடியவழக்கமில்லை யென்பது திண்ணம்.

என்பான்-என்றுசொல்லப்படுவான்.

இல்என்பது இல்லறத்திலிருந்து செய்யப்படும் அறத்திற் காயிற்று.

ஆதலால் என்ன ஆகுபெயர் ?

நல்லாற்றின்-நின்றதுணை, நீத்தார் இயற்றிய நீதிவொழுக்கத்தி னின்று ஏனையோர்க்குச் சகாயஞ் செய்யத்தக்க துணை. (க)

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் றுணை.

துறந்தார்-காக்க உரியவராற் றள்ளுண்டவர்.

துவ்வாதவர்-உணவின்றி வருந்துமவர்.

இறந்தார்-அனாதையாய் வந்திறந்தவர். (உ)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

தென்புலத்தார்-பிதிர் தேவதைகள்.

தெய்வம்-ஏனைய வானோர்கள்.

விருந்து-புதியரும் பழகினவருமாக வந்தவர்கள்.

ஒக்கல்-சுற்றத்தார்.

தான்-இல்வாழ்வான்.

ஐம்புலத்து-ஆறு-இவ்வைந்திடங்களினுஞ் செய்யும்வழி.

ஆறு-செயப்படுபொருள், ஓம்பல்-எழுவாய்.

இதில் தென்புலத்தார்முதல் தானீறாக ஒன்றுக்கொன்று சிறந்ததாகக் கொள்க.

ஆங்கு-அசை. (ங)

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

பழி-இரண்டாம் வேற்றுமை, உலக வழக்கப்படி நான்காம் வேற்றுமை.

பாத்து-பகுத்துஎன்பது இடைகுறைந்து முதல் நீண்டுவந்த வினையெச்சம்; அல்லது பா பகுதியென்று கொள்க.

ஈட்டியென்னுஞ் சொல்லை அஞ்சியென்னும் சொல் அவாவுகின்றது.

ஊண்-உண்ணல் தொழிற்பெயர்.

வாழ்க்கை-முதல்வேற்றுமை.

உடைத்தாயின்என்பது உடைமைஎன்னும் பண்படியாகவந்த குறிப்பெச்சம்.

வழி எஞ்சல்-சந்ததி குறைதல்.

இல்என்பது-எதிர்மறைப் பண்படியாய் வந்த குறிப்புவினை முற்று.

இதுதனித்தேனும் அகர ஐகாரச் சாரியைப் புணர்ந்தேனும் ஐம்பாலுக்கும் மூவிடங்களுக்கும் பொதுவாய்வரும். (௪)

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

அன்பும்-அறனும்-எத்தனும்வேற்றுமை ?

முதலிலுள்ள குறைவாக்கியத்துக்கு இல்வாழ்க்கை எழுவாய்.

அன்பு மனைவிபால் வைக்க, பண்புண்டாகும்.

அறஞ்செய்யப் பயனுண்டாகும்.

அது என்பது அவ்வாறுடைத்தாயிருத்தல்.

இச்செய்யுளால் நம்முன்னோர் ஸ்திரீகளை மதித்தே நடத்தினர் என்பது விளக்கம். (௫)

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

மேற்கூறிய செய்யுட்களினின்று இல்லறத்து ஆறு இன்னதென்று விளக்குக.

புறத்தாறு யாது?

எவன் என்பதனல் பொய்ப் பயனில்லையென்பதும் அப்பயனும்
இங்கே யெய்தும் என்பதூஉம்பெற்றும்.
போஒய்-அளபெடையின் பயன் கூறுக. (சு)

இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

இயல்பினல்-இல்லற ஒழுக்கத்தோடு.
இல்வாழ்க்கை-ஏழாம்வேற்றுமைத் தொகை.
வாழ்பவன் என்பான் இருபெயர் ஒருதொடர்.

முயல்வாரெல்லாருள்ளும் என்பது முயல்வாருள் எல்லாமென மருவியது-ஏழாம்வேற்றுமை கூட்டிப்பிரித்தற் பொருளில் வந்தது.

தலை என்ன ஆகுபெயர்?
முன்செய்யுளையும் இதனேடு ஒட்டிக் கருத்துணர்க. (எ)

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னேன்மை யுடைத்து.

ஒழுக்கி-ஒழுகச்செய்து
யாரை எவ்வாறு
நோற்பார்-தவஞ் செய்வார்.

நோற்பார்என்பது தவஞ்செய்வார் நிலைமையை ஆதலால்;
இதுஎன்ன ஆகுபெயர்?
நோர்பார்-தன்னேயை மட்டும் பொறுப்பார்;
இல்வாழ்வார்-பிறர் நோயையும் பொறுப்பார்;
அதாவது தன்னேயைப் பொறுத்துப் பிறர்நோயைத் தீர்ப்பார்.

அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

ஏகாரத்தை வாழ்க்கை மேலேற்றுக.
அஃதும் துறவறமும்
நன்று-ஒருவாறு நன்றாகும்.
இதற்கு வேறுவிதமாயும் பொருள் கூறலாம்.
இல்வாழ்க்கையே அறத்திற் சிறந்தது.

இதனை அறத்தோடு செய்து உலகம் ஒப்ப நடாத்தின் மிகச் சிறந்த தாகும்.

அல்லது அயலாரைப் பழியாது நடாத்தின் சிறந்ததாகும்.
ஏகாரம் என்ன? (௬)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

வாழ்பவன்-எழுவாய்.
வைக்கப்படும்-பயனிலை.
படும்-தகும்.
வாழ்வாங்கு இல்வாழ்க்கை யியல்பினால்

இப்படி வாழ்பவன் நற்கெதிபெருவான், அல்லது இவ்வுலகின் கண், தேவரைப்போலக் கொண்டாடப் படுவானென்பது பொருள்.

ஆறும் அதிகாரம்.

வாழ்க்கைத்துணைநலம்.

வாழ்க்கைக்குத்துணையாகிய மனையாளது நலம் எனவிரியும்.

மனைத்தக்க மாண்புடையளாகித்தற் கொண்டான்,
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

மனைத்தக்க-மனைக்குத்தக்க.
வளத்தக்காள்-வளத்துக்குத் தக்காள்.
தக்காள்-எழுவாய்; துணை-பயனிலை.

இச்செய்யுளால் பழியஞ்சிப் பொருளீட்டல் கணவன்பாலும், அப் பொருளை யளவறிந்து மனைக்குவேண்டுவன செய்தல் மனைவி யின்பாலுமென விளங்கும்.

இப்பின்னையதொழிலை நம்முந்திய அன்னைமார் கல்வியும் அறிவு மின்றி நடாத்தி யிருப்பார்களோ வென்பது யோசிக்கத்தக்க விஷயம்.

இதனால் பெண்பால்களுக்கும் கல்வி அவசியம் வேண்டுமென்பதாயிற்று. (க)

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

மனை-நான்காம்வேற்றுமை யுருபும்பயனு முடன்றொக்கதொகை.

எனைமாட்சித்தாயினும்-எவ்வளவு செல்வப்பெருமையுடையதாயினும்.
வாழ்க்கை-மனைவாழ்க்கை.
இல்-பயனிலை. (உ)

இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதென்
இல்லவண் மாணாக் கடை.

கடையென்பது இடப்பெயர்,
ஏழாம்வேற்றுமைத்தொகை.
மாணா என்பது கடைகுறைந்த எதிர்மறைப்பெயரெச்சம்.
இல்லவள் என்பதில் ளகரம், ணகரம் ஆவானேன்? (ங)

பெண்ணிற் பெருந்தக்க யாவுள? கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

பெருந்தக்க வினையாலணையும்பெயர் எழுவாய்.
திண்மை-உறுதி.

கற்பு-புருஷன் இட்ட கட்டளைப்படி நடத்தல்.

கல்ப்பம் என்னும் ஆரியமொழிச்சிதைவு கற்பென்றாயிற்று.

கல்-என்னும் பகுதியில் வந்த கற்புஎன்னும் மொழிக்குப் பொருள் யாது? (ச)

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

தெய்வந் தொழாஅள்-முந்தித் தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுது-முந்திக் கொழுநனையே தொழுது
எழுவாள்-இல்லறக் கருமத்திற் புகுவாள்.

தொழாஅள் என்பதை எதிர்மறைவினையெச்சமாகக் கொள்ளினும் அமையும்.

இது கற்புநலத்தைச் சிறப்பித்துக் காட்டிய அதிசயயுக்தி. (௫)

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

செய்துஎனெச்ச மூன்றனையும் செயவென் னெச்சமாகக்கொண்டு பொருள்கூறுக.

இப்படி ஒரு வினையெச்சத்தை மற்றொரு வினையெச்சமாக மாற்றிப் பொருள்கூறுதற்கு மேற்செய்யுட்களி லுதாரணங் காட்டுக.

செவ்வெண்ணும்மை செய்யுள் விகாரத்தாற்றொக்கது.

இம்முத்தொழிலிலும் ஒன்றிலாவது குறைவில்லாதவளே நிறைந்த கற்புடைய பெண். (௬)

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக் குங் காப்பே தலை.

சிறை-நிறை மூன்றும் வேற்றுமைத்தொகை;
மகளிர்-இரண்டாம் வேற்றுமைத்தொகை.

அல்லது சிறைநிறை இரண்டையும் முதல்வேற்றுமையாக்கி, மகளிரை இரண்டாம் வேற்றுமையாக்கிப் பொருள்கூறினுமமையும்.

இச்செய்யுளால் மேற்செய்யுளிற் கூறியதற்காக்குங் கடமை கூறப்பட்டது. (௭)

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

பெண்டிர்-பெற்றாற்-பெறின்-பெண்கள் தங்களைக் கொண்டானைப் பேணப்பெறின்.

புத்தேளிர் வாழுமுலகு பெருஞ்சிறப்புப் பெறுவர்-மறுமையில் பெருமையை அடைவார்.

பேண என்பது சொல்லெச்சம்.

இதனால் தற்கொண்டானைப் பேணுதலாகிய இரண்டாந்தொழில் கூறப்பட்டது.

உலகு-ஏழாம் வேற்றுமைத்தொகை. (அ)

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

புரிந்த என்னும் பெயரெச்சம் வினையெச்சமாகத் திரிந்தது; அல்லது-புரிந்த-இல்-தொகுத்தல் விகாரத்தாற் புணர்ந்தது. இதனால் தகைசான்ற சொற்காக்குந் தொழில் கூறப்பட்டது.

கணவனது தீச்செயல்களையும் மனைவியினது புகழ்மறைக்கு மென்பார்-ஏறுபோற் பீடுநடை யென்றார்.

இல்-மனைவி இரண்டாம் வேற்றுமைத்தொகை. (கூ)

மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு.

மேற்கண்ட-முத்தொழில்களையுடைய மனைவியின் குணத்தை ஆன்றோர் மங்கலமென்பார்கள்.

அத்தகைய மனைவி-நன்மக்களையு மீன்றால்-அம்மக்கட்பேற்றை அம்மங்கலத்திற்கோர் நன்கலம் என்பார்கள்.

ஆன்றோர்-தோன்றாவெழுவாய்.

மாட்சி-பேறு-இரண்டாம் வேற்றுமைத்தொகை.

மங்கலம் என்ப, நன்கலம் என்ப இவ்விரண்டும் தொடர்வினைப்பலர்பால்முற்று. (ய)

ஏழாம் அதிகாரம்.

புதல்வரைப்பெறுதல்.

இவ்வதிகார விஷயத்தை முன்னதிகாரத்தில் (நன்கலம்-நன்மக்கட் பேறு) என்று குறித்துக்காட்டினர்.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை, அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

பிறவென்பது-பிறபேறுகளை, யாமறிவதில்லை-யாம் மதிப்பதில்லை.

அறிவறிந்த மக்கள்-ஞானமறிந்த மக்கள்.

அறிவு, மக்கள் இரண்டும் என்னவேற்றுமை ?

எல்லாப்பேற்றிலும் அறிவுடைய மக்கட்பேறு உயர்ந்ததென்பது கருத்து. (க)

எழுபிறப்புந் தீயவை தீண்டா, பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

எழுபிறப்பும்-முன்னேழு பின்னேழு வமிசத்திற்கும்.

நற்புத்திரனாற் கதிவருமென்பது இந்துமதக்கொள்கை.

எழுப்பிறப்பென்பதை ஈரேழு மூவேழு என முன்னும்பின்னுமாய் அர்த்தங்கொள்ளினும் அமையும். இச்சற்புத்திரனுடைய மூதாக்கள் பாபத்தினால் நரக மமிழ்ந்திருக்கினும் இவன் நற்செய்கையால் வீடுபெறுவாரென்பதும், இவனுக்குப் பின்வருஞ் சந்ததிகள் நற்செய்கையில் வழுவார்களாதலால் நரகே யடையார்களென்பதூஉம் பெற்றும்.

இனி எழுபிறப்புமென்பதனை இந்நற்புத்திரன் நடக்கையின்வலியால் இவனுக்குப் பின்வரும் ஏழுதலை முறையாரும் ஒழுக்கத்தில் வழாஅரென்று உலகஅனுபவத்தாற் பொருள்கூறினும் அமையும்.

பின்வரும் தக்கார் தகைவிலார் (செ. ககா.) என்னுங் குறளினாலுங் காண்க.

இச்செய்யுளால் அறிவறிந்த மக்கட்பேற்றின் பயன்கூறினர். (உ)

தம்பொரு ளென்பதம் மக்கள்; அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்.

தம்மக்கள்-இரண்டாம் வேற்றுமைத்தொகை.

அறிந்தோர்-தோன்றா வெழுவாய்.

அறிந்தோர் தம்மக்களை தங்கள் சொந்தப் பொருளென்பார்கள். ஏனெனில், தாங்கள் செய்யும் நல்வினையால் அவர்கள் ஈட்டும் நற்பொருளும் தமதேயாதல்பற்றி. (ங)

அமிழ்தினு மாற்ற வினிதே; தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்

ஆற்ற-உரிச்சொல்.

(புறநானூறு) படைப்புப் பலபடைத்துப் பல்லோரோடுண்ணு முடைப்பெருஞ் செல்வராயினு-மிடைப்படக் குறுகுறுநடந்து சிறுகைநீட்டி யிட்டுந்தொட்டுங் கவ்வியுந்துழந்து - நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து-மயக்குறு மக்களை யில்லோர் பயக் குற விலர்தாம் வாழுநாளே. (ச)

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

மெய்தீண்டலென்பது - மக்கண்மெய்யை நாம் தீண்டலும் அவர் நம்மெய் தீண்டலும் ஆகும்.

முதற்கூறியபடி-மக்கள்-ஆறும்வேற்றுமை.

பின்னற்கூறியபடி-மக்கள் முதல்வேற்றுமை.

மக்கள் நம்மைத் தழுவுதலே யதிக வின்பந் தருமென்க.

மேற்செய்யுளில் சிறுகை யளாவிய கூழ் என்றதற்கேற்ப இங்கும் மழலைச்சொல்லையுடைய குழந்தைகளென்பது பொருள்.

இன்பம்-இருவழியிலும் பெயர்ப்பயனிலை.

இரண்டாம் வேற்றுமைத்தொகையாக்கி தரும் என்னும் வினையை யொட்டிப் பொருள்கூறினு மிழுக்காது.

இன்பத்தை யெழுவாயாக்கி தீண்டல்கேட்டல் என்பதைப் பயனிலையாகக் கொள்ளினு மமையும்.

மற்று-வினைமாற்றின்கண் வந்ததாகுல் மக்கண்மெய்யை நாம்தீண்டலெனவும் அசைநிலையாகத் தள்ளினல் நம்மெய்யை மக்கள் தீண்டுதலெனவும் பொருள்கொள்க. (ரு)

குழலினி தி யாழினி தென்பர், தம்மக்கள்
மழலைச் சொற் கேளா தவர்.

குழல் - யாழ்-இவற்றின் ஓசைக்குப் பதிலாய் நின்றன. ஆதலால், என்ன பெயர்கள்? மழலைச்சொல் கேட்டவர் அது குழல் யாழினும் இனியதென்பாரென்பது குறிப்பெச்சம்.

குழலினது-யாழினிது-என்பதில் அவற்றின்மீது நிந்தை தோன்றுகின்றது. (சா)

தந்தை மகற்காற்று நன்றி, யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

அவை-கற்றறிவுடையோர் கூட்டம்.

அதில் முந்தியிருப்பச் செயலாவது-தேர்ந்த கல்வி புகட்டி அன்னோர் மதிக்குமாறுசெய்தல். அவை-அம்முச்சாரியைபெற்று வந்தது. மற்றப்பொருட்களைத் தேடிவைத்தல் துன்பம் பயத்திலன்றி நிலையாதென்பது முணர்க. (எ)

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை, மாநிலத்து,
மன் னுயிர்க் கெல்லா மினி து.

மன்னுயிர்க்கெல்லா மென்பது பிறர் கல்வியைச் சகியா அழுக்காறுடையானும் அறிவில் தன்னை முந்து மைந்தனைக்கண்டு உவப்பானென்பது கருத்து.

கல்வியறியாதவனும் பிள்ளைக்குக் கற்பிக்க விரும்புகிறான். (அ)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்.

தான் அனுபவத்திற்கண்ட சான்ருண்மையை பக்ஷத்தினுல் அதிகமென்று நினைத்திருக்கக்கூடுமென்கிற சங்கை நீங்க அப்பக்ஷமற்ற பிறர்சொல்லும் புகழ்ச்சியைக்கேட்ட தாயென்ருர்.

(இதற்கு மேற்கொள்) காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணதே; காய்வதன்கண் உற்ற குணந் தோன்ருதாகும், உவப்பதன்கண் குற்றமுந் தோன்ருக் கெடும்.

ஈன்றபொழுதிற் பெரிதுவக்குமென்றது (வயாஅவும் வருத்தமும் ஈன்றக்கா ணேவும்-கவாஅன் மகற்கண்டு தாய்மகிழ்ந் தாங்கு) என்றபடி ஈன்றமகிழ்ச்சியினும் பிறர் சான்ரோனெனச் சொல்லக்கேட்கும் மகிழ்ச்சி அதிகம். ஏனெனில், அவன் சான்ரோனதற்குத் தானே காரணமென்று கொள்வாளாதலின் (௬)

மகன்றந்தைக் காற்று முதவி, யிவன்றந்தை
யென்னோற்ருன் கொல்லெனுஞ் சொல்.

சொல்-சொல்லை விளைத்தல்; கொல்-வியப்பிடைச்சொல், அல்லது தவத்தின் அளவு தெரியாமையால் ஐயவிடைச்சொல். இதனுல் பிள்ளை தகப்பினினும் புகழடைந்து தகப்பன் இழுக்குடையனுயினும் தன் புகழால் அவன் இழுக்கையு மறைப்பது மகன் கடமையென்ருயிற்று. (௰)

எட்டாம் அதிகாரம்.

அன்புடைமை.

அன்பின்றிக் கணவன்-மனைவி-புதல்வர் இவர்களுக்குள் சிநேகமும், ஒழுக்கமும், உதவியும், கடமையும் நடக்தேரு வாகலால் அன்பை யிங்கு கூறினர்.

அன்பென்பது இயல்பாய் உயிரிடத்தில்காதல் (இது தொடர்புபற்றி வரும்) அருளென்பது இரக்கத்தால் பிறரிடத்திலுண்டாகும்

பக்ஷம். அன்பில்லாதவன் அருளுமில்லானுகையால் பின்னை யதற்கு முன்னையது வித்தென்க.

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூச றரும்

ஆர்வலர்-இயல்பா யன்புடையார். ஆர்வம் பதில் மவ்வீறுழிந்து அல் என்னுஞ் சாரியை சேர்ந்து தொகுத்தல் விகாரத்தால் ஆர்வல் என்றாகி, அர் என்னும் விகுதிபுணர்ந்து ஆர்வல ரென்றாயிற்று. அல்லது ஆர்வு--ஆராய்ச்சி-அலர்-பலர்பால் குறிப்புமுற்று; இரண்டுஞ் சேர்ந்து ஆராயாமல் இயல்பாய் பாசப் பிணிப்பினுல் அன்புடைய ரென்பபொருள்பட ஆர்வலரென் றாயிற்று,

புன்கணீர்-அற்பக் கண்ணீர்.

பூசல்தரும்-வெளிக்குக் காட்டும்.

ஆர்வலரென்பதற்குமுன், தமதன்பிற் குரியாரிடத்தில் துன்பங் கண்டால் என்பது இசையெச்சம்.

ஓகாரம் எதிர்மறைக்கண் வந்தது.

பொருள்—தமக்குரியார் துன்பப்படக் கண்டவுடனே தமதுள்ளத் தில் இருக்கும் அன்பு தானாய் வெளிப்படுமென்பதை கண்ணிற் பொசியும் ஜலமே காட்டிவிடும். (௧)

அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்; அன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

எல்லாம்-மூன்றும் வேற்றுமைத்தொகை.

தமக்குரியர்-தமக்கேயுரியர்.

என்பும்-என்பினுலும்-அதாவது யாக்கையாலும்; உம்மையென்ன?

அன்போ டியைந்த வழக்கென்ப, வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

ஆருயிர்க்கு - என்றுமழியாது நிலைபெற்றுநிற்கும் ஆத்துமாவுக்கு என்போடியைந்ததொடர்பு-மானிடதேகத்தோடுகூடிய நிலைமை

அன்போ டியைந்த வழக்கென்ப-அன்போடு கூடிய பயனுக்கென்று சொல்லுவார்கள்.

அறிந்தோர்-தோன்றுவெழுவாய்.

மாநிட சன்மமெடுத்தது அன்புகாட்டும்பொருட்டு என்பது கருத்து.

அன்பீனு மார்வ முடைமை ; யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

தமக்குரியார்மாட்டுள்ள அன்பு பிறர்மாட்டும் விருப்பத்தை யுண்டாக்கும்; அவ்விருப்பந்தான் ஆர்வம், அஃதுண்டாகப் பிறரும் நம்மை விரும்புவார்கள்; அதுதான் நண்பு, அந்நண்பு எய்துதற்கரிய சிறப்பைத் தரும்.

உடைமை-உடையனுந் தன்மை. (௪)

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

இவ்வுலகத்தில் இன்பநுகர்ந்து பெருஞ்சிறப்பு அடைவதை, அப்படி அடைபவர் அன்போ டில்லற நடாத்திய முறையின் பயனென அறிந்தோர் சொல்வார்.

சிறப்பு என்பதனை-மேலுலகத்தின்ப மென்க.

அதைத் துறந்தார் துன்புற்றடைவர். அன்புற்றமர்ந்த இல்வாழ்க்கையார் இங்கும் இன்புற்றடைவர் என்பது கருத்து. (௫)

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

அறம் வளர்க்கவும், மறம் நீக்கவும் அவ்வன்பே துணை. பித்தத்திற்கிஞ்சி நல்லதென்பதுபோல் மறத்திற்கு அன்பு துணையென்றார். மறம்-பகை, பாவம். (௬)

என்பி லதனை வெயிற்போலக் காயுமே
யன்பி லதனை அறம்.

வெயில்போல-வெயில் காய்கிறுப்போல.
என்பிலதனை-புழுவை.
அன்பிலதனை-அன்பில்லாத விழிஞனை.
நிந்தை தோன்ற அதனை யென்றார்.

முன் மானிட சன்மத்திற்கு அன்பே பயனென்றாராதலின், ஏகாரம் கருணையோடு கூடிய இரக்கத்தைக் காட்டும். (எ)

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை, வன்பார்க்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

வற்றன் மரம்-வற்றலாகிய மரம்-பட்டுப்போன மரம்.
வன்பால்-பாலை நிலம்.

வன்பாலை நிலத்திற் பட்டுப்போன மரமும் தளிர்ப்பதில்லை. அது போல அன்பில்லாத இல்வாழ்க்கையிலும் உயிர் சுகப்படுவதில்லை யென்பது கருத்து. விக்கினேசுரன் கலியாணத்தோடு இவனுக்கும் கலியாண மென்பதுபோல. (அ)

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும், யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

தேகத்திலுள்ள மனதிற்குப் பிரதானமான வுறுப்பு அன்பு. மனதினிகழ்ந்தபடி சொல்லுஞ் செய்கையுமாதலால், அங்ஙனம் அன்பில்லாவிடில் பின்னையதாலும் பிரயோசனமின்று. எவன் செய்யும்-பயனே இல்லையென்பது பொருள்.

இடம்,பொருள்,ஏவலையும் புறத்துறுப்போடு அமைத்துக்கொள்க.()

அன்பின் வழிய துயிர்நிலை, யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

வழியது-கூடிநின்றது.
உயிர்நிலை-உயிர்நின்ற உடம்பு.

(கருத்து) அன்போடு கூடிநின்ற உயிருடம்பே உயிருள்ள வுடம்பு. அன்பில்லாத உடம்பு-என்புதோல் போர்த்த வெற்றுடம்பு போலும் உயிரிருந்தும் இல்லாமையாயிற்று. (ம)

ஒன்பதாம் அதிகாரம்.

விருந்தோம்பல்.

தென்புலத்தார், தெய்வம், விருந்தொக்கல். தானென்றெடுத்த செய்யுளில் முன்னைய இரண்டும் பக்தியாலும், பின்னைய இரண்டும் அன்பினாலும் இயல்பாயுதவி நடந்துவருதல்பற்றி, விருந்தோம்பல் முயற்சியால்செய்யவேண்டும் அறமாதலின், அதனையிங்கு சிறப்பா யெடுத்துக் கூறினார்.

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம்; விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

அன்பினின்று உண்டாவது கருணையாதலால் அக்கருணைத் தொழிலாகிய விருந்தோம்பலை அன்புடைமைக்குப்பின் வைத்தார்.

இல்-இருந்து-ஓம்பி-எனப் பின்முன்னாகக் கூறுக.
எல்லாம்-நோக்கம் யாவற்றும்.
பொருட்டு-நான்காம் வேற்றுமைச் சொல்லுருபு.

வேளாண்மை - வேள்-உபசரித்தல், ஆண்மை-நடத்துதல்-உபசாரஞ் செய்தலை நடாத்துதல்.
ஓம்பி-பேணி.
விருந்தோம்பாவழி இல்வாழ்க்கை பயனில்லை யென்பதாம்.(க)

விருந்து புறத்ததாத் தானுண்டல், சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

புறத்ததா-புறத்துநிற்ப; அதாவது நடையில் தெருத்திண்ணையிலிருப்ப.
சாவா மருந்து-சாவைத் தராத மருந்து.
சாவா மனித னென்பதுபோலன்று.

வேண்டற்பாற்றன்று-அப்படி யுண்ணுதலை நினைத்தலுங் கூடாது; ஈண்டு சாவாமருந் தென்பது அதிசய யுக்தி. (உ)

வருவிருந்து வைகலு மோம்புவான் ; வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

பருவந்து-வருந்தி (பருவா-பகுதி) இப்படியே கைவரல் முதலிய சொல்லுக்குப் பகுதி கூறுக. பாழ்படுதல்-அழிதல்.

இச்செய்யுளால் விருந்தோம்புதலால் பொருளழியுமேயென ஏக்கம் கொள்ளாதே எனத் துணிவு கூறினர்.

வருவிருந்து-என்ன தொகை ?
வைகலும்-வைகல்தோறும். (௩)

அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

முகனமர்ந்து-அழுக்காறு முதலிய நான்கு தீக்குணங்களின்றிக் குளிர்ந்த முகத்தோடு. இல்-ஏழாம் வேற்றுமைத்தொகை. (௪)

வித்து மிடல்வேண்டுங் கொல்லோ, விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

மிச்சின் மிசைவான்-மிகுந்ததை யுண்பான். மிஞ்சு என்னும் பகுதியி லிருந்து மிச்சில் வந்தது.

வித்துமிடல் வேண்டுங்கொல்லோ-கடவு ளனுக்கிரகத்தால் தானய் விளையும். அதாவது திருடர்முதலிய உபத்திரவங்கள் அன்போடு விருந்தோம்புவானை யடையா. (௫)

செல்விருந் தோம்பி வருவிருந்து, பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

வருவிருந்து என்பதில்விருந்துநான்காம் வேற்றுமை யுருபும் பயனுந் தொக்கது; அல்லது இரண்டாம் வேற்றுமையாகக் கொள்ளினும் அமையும்.

பார்த்திருப்பான்-வழி பார்த்திருப்பான், எதிர்பார்த்திருப்பான், காத் திருப்பான்; இதனல் மறுமைப் பயன் கூறப்பட்டது. (௬)

இனைத்துணைத் தென்பதொன் றில்லை, விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

இத்தனையென்பது தொகுத்தல் விகாரத்தால் இனை யென்றாயிற்று.
வேள்வி-இங்கு விருந்தோம்பல்; இதற்கு மானுடயாகமென்று பெயர்; இதை யகராதியிற் காண்க.
விருந்தின் றுணை-விருந்தினாது பெருமை; ஆதலால் இங்கும் பாத்திர மறிந்து விருந்தோம்பல் வேண்டும்.
(உதவிசெயப்பட்டார் சால்பின் வரைத்து) என்பதினாலும்—
"அறப்பயனுந் தான்சிறிதாயினும் தக்கார் கைப்பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்து விடு" மென்பதினாலும் அறிக. (எ)

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர்; விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

பற்றற்றேம்-இழந்து கதியற்றேம்.
பரிந்தோம்பி-பொருளைக் கஷ்டப்பட்டுக் காத்து.
வேள்வி-ஏழாம் வேற்றுமைத்தொகை.
தலைப்படாதார்-சிறப்புக்கொள்ளாதார்.
அதாவது விருந்தோம்பார் பொருளையிழந்து பரிதவிப்பார்கள்.
(உய்த்தீட்டுந் தேனீக்கரி) என்பதினாலுமுணர்க. (அ)

உடைமையு ளின்மை விருந்தோம்ப, லோம்பா
மடமை; மடவார்க ணுண்டு

அதுவென்பது-இரண்டாம் வாக்கியத்தின் தொடுத்தவெழுவாய் பிரிநிலை ஏகாரம் விகாரத்தால் தொக்கது-விரித்துக் காட்டுக. எல்லாவுடைமை யிருந்தும் விருந்தோம்பல் ஓம்பா மடமை யுண்டாயின்-உள்ளதென்னில் லவண் மாணக் கடையென்பதுபோல பயன்படா.
மடவார்-பேதைகள். (க)

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

விருந்து அனிச்சப்பூவினு மெல்லியதெனக் காட்டினர். இதனால் முகன் மலர்ந்து விருந்தோம்பல் அவசியமென்பது கூறப்பட்டது.
குழையும்-கசங்கும்.
மற்றது-மனங் கசங்கும். (ώ)

பத்தாம் அதிகாரம்.

இனியவைகூறல்.

போன அதிகாரத்தின் முடிவில் இன்முகத்தோடு விருந்தோம்பல் கூறி அம்முகத்திற்கேற்க இனியவை கூறலை இங்கு கூறுகிறார்.

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

இன்சொலே ஈரமளை இப்படிறிலவாம், அதுதான் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்.

இவ்வண்ணம் பிரித்ததற்கு மேலதிகாரத்தில்-கூ-ம் குறளை நோக்குக. ஆல்-அசை.

அளைந்து என்பதிற்குப் பதிலாய் அளை இ என்று அளபெடுத்தது. இது சொல்லிசை நிறைக்கவந்த அளபெடை; இவ்வாறு இன்னுஞ் சிலவினையெச்சங்களை அளபெடையாகத் திரித்துக் காட்டுக.

செம்பொருளாவது-மெய்ப்பொருள்.

இனி செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்லுத லானது இன் சொல்லோடுகூடி அன்போடு கலந்து பொய்மை நீங்கி நிற்பதுவாம் எனப் பொருள்கொளினு மமையும்.

வாய்ச்சொல்லென்பதினால் பயனில சொல்லுஞ் சொல்லாரென்பது கருத்து. (க)

அகனமர்ந் தீதலி னன்றே ; முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

அகனமர்ந்து-மனஞ் சந்தோஷித்து.
அமர்தலாவது-ஒத்திருத்தல்.

அதாவது துர்க்குணங்களாற் சஞ்சலப்படாது நிற்றல், முகனமர்ந்திருந்தால், அது இயல்பில் உண்ணிகழ்ச்சியைக் காட்டுமாதலால் பின்னையதைப் பேண அகனமர்ச்சி தானேவரும்.

அகன்-முகன்-இவ்விரண்டும்போலி,

பெறின்-தன்னைச் செய்து கொண்டால்.

நன்று-என்பதற்கு அது என்னும் எழுவாயை வருவித்துக்கொள்க; உள்ளத்தினிகழ்வதை முகங்காட்டும், ஆதலால் கெட்ட வுள்ளத்தோடு இன்சொல்லுரைக்கினும் முகங்காட்டு மென்பது கருத்து. (உ)

முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சொ லினதே யறம்.

அகத்தானா மின்சொல்-கருதியபடி அன்போடுகூடிய சொல்.
உடனென்னு முருபு ஆ னென்னும் உருபா மாறிவந்தது.

குளிர்ந்த முகத்தோடுவந்து நோக்கி மனதார இனியசொற்களைச்சொல்லிச் செய்வதே யறம்.
இன்சொலினது-குறிப்புவினைமுற்றாலணையும்பெயர்.
இன்சொல்லினிடத்தவென்பது பொருள். (ங)

துன்புறாஉம் துவ்வாமை யில்லாகும், யார்மாட்டு
மின்புறாஉ மின்சொ லவர்க்கு.

துன்புறாஉம்-துன்பத்தை விளைக்கும்.
இல்லாகும்-பண்படியாகவந்த குறிப்புமுற்று.
இன்சொல்லவர்க்கு-இனியசொல்லை யுடையவர்க்கு இலக்கணங் கூறுக.

அன்பீனு மார்வமுடைமை-என்னுங்குறளின் பொருளை ஒத்துப் பார்க்க. (ச)

பணிவுடைய னின்சொ லனாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

பணிவுடையனாகி இன்சொலனாதல்.

இன்சொல்லிருக்குமிடத்துப்பணிவு இருக்கவே இருக்கும்; பிறஅணிகள்-அணியல்ல,அணியென்பதை யிருவழியிலும்கூட்டுக; உறுப்பணியாற் பயனில்லை, அகத்தணியே பயனென்பது கருத்து.()

அல்லவை தேய வறம்பெருகு, நல்லவை
நாடி யினிய சொலின்.

நல்லெண்ணங்களைத் தெரிந்து அவற்றை இனிய சொற்களால்சொல்லத் தீமை வராது; அதுஒழிய அறம் வளரும். (சு)

நயனீன்று நன்றி பயக்கும், பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

தலைப்பிரிதல்-இடத்து நின்றும் பிரிதல்.
பண்பின்-தலைநின்றும் பிரிதல்.
பண்பாவது இன்சொலனுதல்.
நயன்-போலி-நன்மை இங்கு நீதியான நடக்கை.
தலைப்பிரிதலை-ஒருசொனீர்மையாகக்கொளினுமமையும்.
நன்றி-நன்னடக்கையால்வரும் அறம்.
நயன்-பயன் இரண்டாம் வேற்றுமைத்தொகை. (எ)

சிறுமையு ணீங்கிய வின்சொன், மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

உள்-ஐந்தாம் வேற்றுமைத்தொகை.

சொல்லினுள்அல்லது சொல்பவனகத்துள் எனப்பொருள்கூறலாம். சிறுமை-குற்றம்; மறுமையும்-இம்மையும் ஏழாம் வேற்றுமைத் தொகை. இம்மையில் உலகத்தார் நட்பு. (அ)

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

இனிதும்-ஈன்றலும்-இரண்டாம் வேற்றுமைத்தொகை.
காண்பான்-அனுபவசித்தியாற் காண்பவன்.
வழங்குவது-தொழிற்பெயர் வினையாலணையும்பெயரான்று விளக்கிக் காட்டுக. (கூ)

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

இனிய-இன்னாத-இவ்விரண்டுஞ் சொல்லை யாவவி நின்றன.
கூறல்-எழுவாய்-கவர்ந்தற்று-பயனிலை.

கனியிருப்ப என்பதற்குப்பின் அதை நுகராமலென்பது இசையெச்சம். (ம)

இவ்விடத்து இலக்கண மெழுதுமுறைமையை சற்று விவரிப்பது அவசியம். இலக்கணங்கூறல்.

பத விலக்கணம்
சொல் விலக்கணம்
புணர்ச்சி யிலக்கணம் } என ஐந்து வகைப்படும்.
தொடர்மொழி யிலக்கணம்
அந்வய இலக்கணம்

பத விலக்கணமென்பது,ஒருவாக்கியத்துள்ள ஒருபதத்தின் முன்பின் தொடர்ச்சியை நோக்காது அதற்குப் பகுதி, விகுதி, இடைநிலைமுதலிய வுறுப்புக்களைக் கூறுவதுதான்.
உதாரணம் இக்கடைசிச்செய்யுளில் (இன்னாத) என்னும் பதத்துக்கு-இன்னா-பகுதி, அ-பெயரெச்சவிகுதி, த-எழுத்துப்பேறு இவைசேர்ந்து இன்னாதவென முடிந்ததாகச் சொல்க.

இன்னாத வென்னுஞ் சொல்லுக்குச் சொல்லிலக்கணங் கேட்டால் எதிர்மறைப் பெயரெச்சமாய் தொகை நிலையா நின்ற சொல்லை யவாவி நிற்கின்ற தெனக் கூறுக.

புணர்ச்சி யிலக்கணங் கூறுங்கால் வேற்றுமை யல்வழிப்பொருளில் தொக்கும் விரிந்தும் நிற்கும். இரண்டுமொழி புணர்ந்ததற்கு இலக்கணம். இது சொல்லின் றன்மையைப் பற்றியது மன்று;பதத்தின் றன்மையைப் பற்றியதுமன்று. (உதாரணம் கடைசிச்செய்யுளில், இருப்ப, காய், என்கிற விரண்டு மொழியும் அல்வழிப்பொருளில் வினையெச்சத்தொடரில் புணர்கின்றன. இங்கு (இயல்பினும் விதியினும்) என்கிற சூத்திரப்படி நகரவொற்று இரட்டியதென்க.

தொடர்மொழி யிலக்கணமென்றால் வேற்றுமைத்தொகை முதலிய ஆறு தொகைகளுக்கும் வினையை அல்லது பெயரை இரண்டு

முதலிய சொற்கள் தொடர்ந்து இடையிற்பொருள் பிரியாது தழுவும் தொடர்களுக்கும் இலக்கணங்கூறல்.

உதாரணம்: (சிறுமையு ணீங்கிய வின்சொல்) என்பதில் இன் சொல்லென்பதை சிறுமையு ணீங்கிய வென்னுஞ் சொற்கள் தழுவி நிற்கின்றமையால், அவைகூடி ஓர் பெயருரித்தொடர் மொழியாயின். இப்படியே வினையுரித்தொடர்மொழியும் வரும்.

அந்வயவிலக்கணமென்றால் ஒரு வாக்கியத்துள்ள எழுவாய் பயனிலை செயப்படுபொருளைக் காட்டி அம்மூன்றோடும் தனித் தனியேஅந்வயிக்கும் (அதாவது அமைந்து பொருள் கொடுக்கும்) வாக்கியங்கள், தொடர்கள், அடைகள் இவற்றை யிணக்கிக் கூறுதல்.

உதாரணம்.

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

எழுவாய்.	பயனிலை.	செயப்படு பொருள்.	குறிப்பு.
இன்னாத கூறல்.	கவர்ந்தற்று.	காய்.	எழுவாய் தொழிற்பெயராதலால். செயப்படுபொருளைத் தழுவி வந்தது.
இனிய சொல்.	உளவாக.	...	இக்குறைவாக்கியம் கூறல் என்னு மெழுவாயைத் தழுவி முடியும்.
கனி.	இருப்ப.	...	இக்குறைவினை வாக்கியம் (கவர்ந்தற்று) பயனிலையைத் தழுவி முடியும்.

குறள்வெண்பாவிலக்கணம்.

இந்நூலிலுள்ள செய்யுள்கள் எல்லாம் குறள்வெண்பாக்கள். இதனால்-நூலிற்குப் பெயர்வந்த முகாந்திர மறிந்துகொள்க.

முதலடி நான்குசீரும் இரண்டாவது மூன்றுசீருமாய், இயற்சீரும் வெண்சீரும் மாத்திரம் வரப்பெற்று "காய்முன்னேரும் விள முன்னேரும்மாமுன்னிரையும் வருவது வெண்டளை," என்கிற விதிப்படி தொகுத்து, நாள், மலர், காசு, பிறப்புஎன்னும் வாய் பாடுகளால் முடிந்துவருஞ் செய்யுள் குறள்வெண்பா.

நேர்-நிரை-என அசை-உ.

நேரசை வாய்பாடுகள்-ஆ-ழி-வெள்-வேல்	காரிகை-உ.
நிரையசை வாய்பாடுகள்-வெறி-சுறா-நிறம்-விளாம்	

நேரும் நேரும், நிரையும் நேரும், நிரையும் நிரையும், நேரும் நிரையும் ஆய வருஞ்சீர்கள் நான்கும் ஈரசை இயற்சீர்கள்.

தேமா-புளிமா-கருவிளம் - கூவிளம்-முறையே இவற்றிற்கு வாய் பாடுகள். இந்நான்குடன் மற்றொரு நேரசை சேர நான்கு வெண்சீராகும்.

இவற்றிற்கு வாய்பாடுகள்.

முன் வாய்பாடுகளுடன் காய் சேர்த்தமைத்துக் கொள்க.

ஆகவே-வாய்பாட்டின்படி,

இயற்சீரில் மா, இறுசீரிரண்டு;

விள, இறுசீரிரண்டு.

வேண்சீரில் காய் இறுசீர்நான்கு.

வெண்பா முழுக்க வெண்சீரால் நடந்தால் ஏந்திசைச் செப்பலோசை வெண்பா.

இயற்சீரால் நடந்தால் தூங்கிசைச் செப்பலோசை வெண்பா; மருவி நடந்தால் ஒழுகிசைச் செப்பலோசை வெண்பா.

பாட்டின் முதற் சீர்முதல் ஈற்றுச்சீர்வரையில் முன்சீரின்ஈறும் பின் சீரின் முதலும் மேற்குறித்த சூத்திரவிதிப்படி பொருந்தி வரவேண்டும்.

இப்புத்தகத்தில் வரும் குறள்வெண்பாக்களில் பலவற்றைப் பொருளெளிதில் விளங்கும்பொருட்டு சந்திபிரித் தெழுதி யிருக்கின்றனம்; அச்சந்திகளை விதிப்படி பொருத்தியெழுதினால் அந்தந்த வெண்பாவின் இலக்கணம் நன்றாய்த் தெரியும்.

இலக்கண விலக்கியத் திறவு கோல்

முற்றுப்பெற்றது.